**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 22 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக செலுத்த வேண்டியுள்ள ரூபா 2,876,771 இற்கு ஓய்வூதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு, காணி விற்பனைப் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணியிருக்கவில்லை.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் | |
| (i) அத்தியாயம் V பிரிவு 148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் வாகனங்கள், |

| | |
|---|---|
| | விலங்குகள் மீது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் V பிரிவு 158(1) | ஆதனவரி நிலுவை ரூபா 628,007 செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு எழுதப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 5,165,225 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவினத்தை விடக் கூடிய வருமானமாக ரூபா 28,623,466 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தைவிடக் கூடிய வருமானமாக ரூபா 19,755,761 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகளில் ரூபா 8,867,705 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகை ரூபா 72,887 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகை ரூபா 9,168 விளைந்திருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகளில் ரூபா 63,719 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 108,653,018 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 83,913,762 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 24,739,256 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 101 | 100 | 628 |
| குத்தகை வாடகைகள் | 3,027 | 5,519 | 70 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,665 | 1,316 | - |
| ஏனைய வருமானங்கள் | 90,711 | 86,144 | 75,255 |
| மொத்தம் | **95,504** | **93,079** | **75,953** |

**2.4.2 ஆதனவரி**

அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 628,007 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 441,098 இன்று வரை சபைக்கு கிடைக்கவில்லை.

(ஆ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 63,903,300 பெறுமதியான முத்திரைக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 125 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த போதும் 117 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன்படி 09 பதவியினர் பற்றாக்குறையாகவும் 01 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளனர்.

(ஆ) (i) அழிக்கப்படவேண்டிய நூலகப் புத்தகங்கள் அழிக்கப்படாதுள்ளது.

(ii) அலுவலக தீ விபத்து தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) வருடமொன்றிற்குக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும், சபையில் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டுள்ளது. .

3.2 **குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---------------------------------------------------

சபைக்கு உரித்தற்ற காணி ஒன்றில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டமையினால் அது பயன்படுத்தப்படாமலுள்ளது.

**3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டிருக்காமல் குவிக்கப்படுகின்றது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

--------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------

**செலவினக் கட்டமைப்பு**

--------------------------------------

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 204 தொடக்கம் ரூபா 14,168,216 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.